# திருப்பூர் மாவட்டத்தில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல்!









திருப்பூர் மாவட்டத்தில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு, விண்ணப்பித்திருந்தவர்களை மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் கழக இளைஞர் அணி செயலாளர்– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (27.08.2025) நேர்காணல் செய்தார். மேலும் அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்து, கொண்டுவந்திருந்த புகைப்படத் தொகுப்பு– மினிட் புத்தகம் ஆகியவற்றை ஆய்வு செய்து, பணி சிறக்க வாழ்த்தினார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரம் அடங்கிய அறிவிப்பு விரைவில் முரசொலியில் வெளியாகவுள்ளது.

### கழகத் தலைவராய் 8-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினை திருவள்ளூர் மத்திய மாவட்டம் வரவேற்று வாழ்த்துகிறது!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அறிக்கை!

திருவள்ளூர்,ஆக.28-

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2018 ஆகஸ்ட் 28 - திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மீண்டும் ஒரு எழுச்சி நாள். தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரை இழந்து தொண்டர்கள் சோகத்தில் இருந்த காலத்தில், திமுகவின் தலைவராய் பொறுப்பேற்று அனைவருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தி புதிய அரசியல் எழுச்சிப் பயணத்தை தொடங்கிய நாள் அது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராய் பொறுப்பேற்று 7 ஆண்டுகள் நிறைவடைந்து இன்று 8 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரால் கட்டிக்காக்கப்பட்ட மாபெரும் இயக்கமான திமுகவின் தலைவராக 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் நாள் அவர் பொறுப்பேற்ற போது இருந்த சவால்கள் ஏராளம். அவை எல்லாவற்றையும் எதிர்கொண்டு அரசியலில் புதிய பாதையை ஏற்படுத்தியிருக்கிறார். அதுதான் திராவிட மாடல். அதாவது எல்லாருக்கும் எல்லாம் என்பதே அதன் அடிப்படை.

2019ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மக்களை வைத் தேர்தலை சந்திக்கும் போது கழகத்திற்கு ஒரு எம். பி கூட கிடையாது. எதிர்க்கட்சிகள் நம்மை எள்ளி நகையாடிய காலம் அது. அப்போது, தன்னுடைய அரசியல் சாணக்கியத்தால் வலுவான கூட்டணியையை அமைத்து, தமிழ்நாட்டில் மகத்தான வெற்றியை பெற்றுத்தந்தவர் நம்முடைய தலைவர். நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாக திமுக உருவெடுத்தது. நாட்டின் இதர பகுதிகளில் பாஜகவிற்கு ஆதரவு இருந்தபோதிலும், மோடியின் பிம்பத்தை தமிழ்நாட்டில் தவிடுபொடியாக்கியதன் மூலம் நாடு முழுவதும் அதிகம் பேசப்பட்டவர் நம்முடைய தலைவர். முந்தைய தேர்தல் தோல்வியினால் துவண்டிருந்த கழக தொண்டர்களுக்கு இது பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. கடின உழைப்பையும் தாண்டி தலைவரின் அரசியல் வியூகம், திமுக கூட்டணிக்கு பிரம்மாண்டமான வெற்றியை சாத்தியப்படுத்தியது. அதுமட்டுமல்ல பாசிச பாஜகவை வீழ்த்த நினைக்கும் அனைத்து கட்சியினருக்கும் புது நம்பிக்கையை ஏற்படுத்தின.

அதன்பிறகு நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில், ஆளுங்கட்சியின் பணபலம், அதிகார பலத்தையும் மீறி திமுக தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. இது ஆளும் கட்சியை நிலைகுலையச் செய்தது. அதுமட்டுமல்ல, தொடர்ச்சியாக 10 ஆண்டுகளாக ஆட்சி நடத்துகிறோம் என்கிற பெயரில் தமிழ்நாட்டை குட்டிச்சுவராக்கி, டெல்லி அரசாங்கத்திடம் அடிமைப்பட்டு தமிழர்களின் தன்மானத்தை கேள்விக்குறியாக்கிய அதிமுகவை, 2021ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஓட ஓட விரட்டியது நம்முடைய தலைவர் தான். தலைவரின் அதிரடி அரசியலால் ஆட்டம் கண்டு போன எதிர்க்கட்சிகள் இதுவரை மீளவில்லை. மீளவும் முடியாது.

இதனால் திமுக தொண்டர்கள் மிகுந்த உற்சாகமடைந்தனர். தொண்டர்களுக்கு இது மிகப்பெரிய உத்வேகத்தை கொடுத்தது. தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். எதிர்க்கட்சிகளோ நிம்மதியை இழந்து கலக்கமடைந்தன.



கட்சித் தலைவர் என்ற பொறுப்பைத் தொடர்ந்து மக்களின் பேராதரவுடன் தமிழ்நாட்டின் தலைவர் என்கிற முறையில் முதலமைச்சராக, மு.க.ஸ்டாலின் செய்துவரும் சாதனைகள் ஏராளம். அனைத்து மக்களுக்குமான திட்டங்களை செயல்படுத்தி திராவிட மாடல் ஆட்சிக்கான அர்த்தத்தை நாடு முழுவதும் எடுத்துரைத்து வருகிறார். தலைவரின் திட்டங்கள் பலவும், ஏழை விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றக்கூடியதாக மட்டுமல்லாமல் நாட்டிலேயே முன்னோடி திட்டமாக இருப்பதே இவரின் தலைமைக்கான அளவுகோல். இங்கே குறிப்பிட வேண்டிய முக்கியமான அம்சம் என்ன வென்றால், நம்முடைய தலைவர் வெறும் வளர்ச்சித் திட்டங்களை மட்டும் செயல்படுத்துவதில்லை. அவை அனைத்தும் சமுதாயத்தை மேம்படுத்தும் சீர்திருத்த திட்டங்களாவே இருக்கின்றன. நம்முடைய தலைவர் செயல்படுத்திய திட்டங்கள் பலவற்றை பல்வேறு மாநிலங்கள் பின்பற்றுவதே இதற்கு சாட்சி. தற்போது கூட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பார்த்து வியந்து பாராட்டிய பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான், உடனடியாக அவருடைய மாநிலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தப்போவதாக கூறியிருக்கிறார். இதுதான் திராவிட மாடல் அரசின் வெற்றி.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் என மக்களுக்கான முத்திரை திட்டங்களை அமல்படுத்தி வருகிறார் முதலமைச்சர். இலவசங்களை வாரி இறைத்து தமிழ்நாட்டிற்கு பொருளாதாரா சிக்கல் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக ஏராளமானோர் வயிற்றெரிச்சல் பட்டு விமர்சனங்களை தொடுத்து வரும் நிலையில், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இரட்டிப்பு இலக்கத்திற்கு மாற்றினார். தமிழ்நாட்டின் பொருளாதாராம், தேசிய சராசரியை விட இருமடங்கு அதிகரித்திருப்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் எடுத்துரைப்பதே இதற்கு சாட்சி.

கட்சியையும், ஆட்சியையும் ஒரே நேரத்தில் திறன்பட வழிநடத்தும் ஆற்றல் நம்முடைய தலைவருக்கு மட்டுமே உண்டு என்பதற்கு இதை விட வேறு என்ன வேண்டும். இன்னும் பல ஆண்டுகள் தலைவரின் சீரிய செயல்பாடுகளை தமிழ்நாடும், இந்திய தேசமும் காணப்போகின்றன. தலைவராக பொறுப்பேற்ற பின் 8 ஆண்டுகளாக, திமுக கண்ட தேர்தல்களம் எல்லாம் வெற்றி தான். 2019 நாடாளுமன்றத் தேர்தல் முதல் கடைசியாக நடைபெற்ற விக்கிரவாண்டித் தேர்தல் வரை கழகத்திற்கு மாபெரும் வெற்றியை பெற்றுத் தந்திருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். திமுக களம் கண்ட தேர்தல்களில் எல்லாம் வெற்றி பெற்று அதனை தொண்டர்களுக்கே பரிசாக அளித்துவர் தலைவர். திமுகவின் வெற்றிக்கு தொண்டர்களின் அயராத உழைப்பே காரணம் என மகுடம் சூட்டினார்.

நாடே திரும்பிப் பார்க்கும் வகையில், கடந்தாண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் திமுக கூட்டணிக்கு வெற்றி பெற்றுத் தந்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்துவரும் மக்களுக்கான அரசியலால், பாஜகவால் மட்டுமல்ல அதனுடன் கூட்டணி சேர்ந்தவர்களால் கூட தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை.

இன்றுவரை தமிழ்நாட்டு தேர்தல் களத்தை எதிர்கொள்ள முடியாமல் பாஜக தவிப்பதற்கு ஒரே காரணம் திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினின் தலைமை தான். இதுபோன்ற செயல்பாடுகளால் தான் கழக தொண்டர்கள் தலைவரை கொண்டாடுகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் தலைவரை மனதார போற்றுகிறார்கள். பிற மாநில அரசியல் தலைவர்கள், நம்முடைய தலைவரின் ஆலோசனையை நாடுகிறார்கள். தலைவரின் தலைமைப் பண்மை திமுக கூட்டணிக் கட்சியினரும் மனதாரப் பாராட்டுகிறார்கள். திமுக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலையும் சந்திக்க ஆயத்தமாகி வருகின்றனர். மேலும் பல கட்சிகள் தலைவரின் தலைமையின் கீழ் தேர்தலை சந்திக்க விரும்புகின்றன.

தலைவரிடம் இதுபோன்ற தலைமைப் பண்புகள் ஆயிரம் உண்டு அவரைக் கொண்டாடுவதற்கு.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

## சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் !

### மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிக்கை!

சென்னை ஆக:28

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி புதிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர். பாலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி மாவட்டதிற்கு உட்பட்ட மயிலை பகுதி கிழக்கு,மேற்கு,தியாகராயர் நகர் பகுதி கிழக்கு,மேற்கு புதியதாக நியமிக்க பட்டுள்ள பகுதி அமைப்பாளர்,துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் இன்று ( 28.8.2025 வியாழன் ) மாலை 5 மணியளவில்,மயிலை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட தலைவர்,துணை தலைவர்,மாவட்ட துணை அமைப்பாளர்கள்,பகுதி அமைப்பாளர்கள்,

துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிக்கை விடுத்துள்ளார்.




காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் வாரணவாசி ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம். தேவேந்திரன் பி.சேகர். டி. சஞ்சய் காந்தி. ஊராட்சி மன்ற தலைவர்.திருமதி பிரேமா மோகனசுந்தரம் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


